தேவி பிலிம்ஸாரால்

தமிழில் தயாரிக்கப்பட்ட

பக்த

புரந்தரதாஸ்

டைரக்ஷன்:

தத்தாத்ரய்யா & பாபு ராவ்

சங்கீதம்:

சர்மா பிரதர்ஸ் & மாருதி சீதாராமய்யா

எடிடிங்:

டி' க் ரூ ஸ்

சம்பாஷணை & பாட்டு:

ஆரியகான கே. வி. சந்தானகிருஷ்ண நாயுடு

சித்திர விளம்பரம்:

எம். ஆர். வீராசாமி நாயுடு

படம் தயாரித்த இடம்:

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்

&

நேஷனல் மூவிடோன் கம்பெனி, லிமிடெட்

நடிகர்கள்:

வித்வான் ஜி. கல்யாணராம அய்யர்	....	புரந்தரதாஸ்
டி. ஏ. கல்யாணராம அய்யர்	....	ராஜாராம்
எம். அரிதாஸ் நாயுடு (சென்னை கவர்ன்மெண்டு பார்டி விதூஷகர்)	....	அனுமந்தராவ்
மா. கோவிந்தராஜு	....	சாது
மாஸ்டர் சுப்ரமணியம்	....	வரதவிட்டல்
ஸ்ரீமதி சரஸ்வதி	....	லட்சுமிபாய்
,, வி. ராஜம்	....	சுப்பம்மா
,, நாகம்மா	....	இந்திரா
,, சத்தியபாமா	....	பங்காரு
,, சரோஜம்மா	....	சுந்தரி
சௌ. பிரகதாம்பாள்	....	ருக்மணி

மற்றும் பலர்

PURANDARDAS
(STORY)

India has for a long time been the abode of many a great devotional bard who illuminated the hearts of people by preaching morals and devotion, through a natural flood of beautiful melodious songs so keenly appealing to every one from prince to peasant.

Purandardas is one of such luminaries who is born a millionaire at Purandarghat in the Karnataka country. He is known as Krishnappa Nayak in his early days, leading his life as a banker. Krishnappa Nayak is so miserly that he drives away his daughter Rukmani to her husband's house on a Deepavali day, even before her nuptial marriage, in order to minimise the expenses, for the simple reason that she offered alms to a beggar, while one Raja Rao his neighbour who adheres to the customs of the society pledges his last jewel with the Nayak and borrows money at an exhorbitant rate of interest, in order to please his son-in-law by giving him presents, on the same Deepavali day. (The life of this love crazy son-in-law Hanumantha Rao is an example to show to the world the sufferings of a man of two wives as Purandardas has sung in one of his Keerthanas.)

(*See the comic incidents on the screen.*)

In spite of his great miserliness Krishnappa Nayak is a man of strict principles, who considers money as God. God Mahavishnu taking pity on this ignorant person who is immersed in fathoms of darkness and avarice, creates after many tests a fine situation to extricate the soul from the great ignorance in which it is plunged and makes Lakshmi Bai, wife of Nayak, the medium for the purpose, as he finds in her a pure and innocent soul.

The Almighty appears before Lakshmi Bai in the form of a poor Brahmin and requests her to lend him her diamond mukuthi (the nose screw) for a day, to be used by his wife at his daughter's marriage. The good lady moved at the request, lends the jewel which the Brahmin offers to Nayak in the shop for sale. The latter suspecting the jewel to be his wife's, comes home with the pretext of bringing money while he safely ties the mukuthi, at the end of his cloth. Lakshmi Bai who is asked by the husband to produce the mukuthi, not being able to do so, goes inside the Pooja room and determines to commit suicide before the idol of Lord Krishna in order to avoid further trouble. Pounding the diamond in the ring on her finger, she drinks the solution offering her soul to God. On opening the eyes she finds the mukuthi in the cup while the ring is in tact. Not being affected by even the poison, Lakshmi Bai joyfully comes out and delivers the mukuthi to her husband. Nayak examines the knot at the end of his cloth and to his utter disappointment and astonishment finds the mukuthi absent. Immediately there comes a change in his mind for humiliation. He enquires into the details when Lakshmi Bai plainly says that God protected her as she lent the mukuthi to the Brahmin respecting Dharma. The true and devoted wife further ventures to open the eyes of her husband by proving that God's grace can give his devotees eternal bliss while worldly riches are the cause of ignorance and misery. This brings about a very great effect on the mind of Nayak who realises that serving God is the only means for real happiness. He then gives away his all in charity to the poor and resolves to spend the remaining part of his life time in serving the country by preaching to the people his great experience and devotion through songs composed by himself.

Having received upadesam (initiation) from the Great sage Vyasarayaswami at Hampai, he sings thousands of devotional songs wandering over the country trying to set right the society and the nation infusingly to them a spirit of devotion and Dharma.

In the meanwhile Rukmani has been suffering unbearable torture at the hands of her wicked and avaricious mother-in-law who expected rich presents to her son from the millionaire Nayak, but was sadly disappointed. The sorrowful prayer of the girl having touched the hearts of God Vishnu and Lakshmi Devi, they both go in the guise of Krishnappa Naik and Lakshmi Bai to Rukmani's house with Brahma in the form of Varada Vittal, their son, on the day of the Nuptial marriage of Rukmani. They offer very rich presents and the auspicious occasion goes on with grandeour to the joy of the mother-in-law and all.

By this time Krishnappa Nayak is known in the country as the Great Purandardas, and his name has become very popular in every household, through his Keerthanas and thousands become his disciples. Hanumantha Rao, having undergone series of troubles on account of his two wives, also becomes a disciple of Purandardas.

God Panduranga, finding that, in spite of his pure heart and devotion, Purandardas is not yet free from anger, wants to teach him a lesson, goes one night in the form of Purandardas to a dancing girl's house and being pleased at the dance and music, presents her with a jewelled bracelet. The next morning, the archaka (the worshipper) finding the ornament missing on the wrist of the idol, reports the matter to Kotwal who investigates the case and gets evidence that Purandardas is the culprit. He then sentences Das to suffer one hundred lashes on his body.

See the further miracles on the screen.

"புரந்தரதாஸ்"

கதையின் சுருக்கம்

புரந்தர காட்டில் ரத்ன வியாபாரம் செய்து கோடிக்கணக்காய் சம்பாதித்த 'கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவர் தமது மனைவி மக்களுடன் வாழ்க்கை நடத்தி வருகின்றார்.

பூதயையில்லாதவர், பணமே தெய்வமெனக் கொண்டாடும் பரமலோபி, சிரித்துப் பேசினால் செலவுக்கிடமாய் விடுமென எவர் மேலும் சீறி விழும் எரி குணத்தர்.

இப்படி கொஞ்சமும் தருமகுண மில்லாத இவரை பக்தவத்சலனாகிய பகவான் நல்வழிப்படுத்தக் கருதி ஒரு குடுகுடுப்பைக்காரனாக இவர் மனையை நாடி வந்து பிச்சை கேட்கிறார். புத்திரியான ருக்மணிபாய் சிறிது அரிசி கொண்டு வந்து போடும் சமயம் அங்கு வந்த நாயக்கர் சரேலெனப் பாய்ந்து ருக்மணியின் கை யரிசியைத் தட்டி விடுவதுடன் குடுகுடுப்பைக்காரனையும் கோபித்து வெருட்டி விடுகின்றார்

ருக்மணியோ விவாகமான பெண்; ருதுமதியானவள்; இன்னம் சாந்தி முகூர்த்தமாகவில்லை. இந்நிலையில் பாழாப்போன தீபாவளியும் வந்து விட்டது? பார்த்தார் நாயக்கர் செலவை மிச்சப்படுத்த இதுதான் சமயமென்று, பிச்சையிடப்போனதை காரணமாகக் கொண்டு ருக்மணியை அவள் புருஷன் வீட்டுக்குப்போய் விடும்படி நிந்தித்து வெருட்டி விடுகின்றார்.

மனைவியான லக்ஷ்மிபாய் எவ்வளவு தடுத்தும் பயனற்றுப் போகவே கண்ணீர் சொரிகின்றாள். சிறுவனாகிய வரத விட்டலோ சகோதரியைப் பிரிய மனமில்லாமல் கதறுகின்றான் ருக்மணியின் வண்டி மறைந்து விடுகிறது.

ஒரு மாயப் பிராமணர் கிருஷ்ணப்ப நாயக்கரிடம் வந்து தமது மகளுக்கு விவாகமெனப் பொருளுதவி கேட்கின்றார். நாயக்கர கொடுப்பவரா? ஒரு செப்புச் சல்லியும் இல்லையெனச் சொல்லி நெட்டி விடுகிறார். 'ஈயார் தேட்டை, தீயார் கொள்வர்' லோபிக்கு இரு செலவன்றோ? பண்டரிபுரத்திலுள்ள நாயக்கர் கடையில் திருட்டு போய் விடுகின்றது. இதை யறிந்த நாயக்கர் மனப்பதற்ற மடைந்து மனைவியையும் மகனையும் அழைத்துக் கொண்டு பண்டரியை நாடியோடித்

தமது கணக்கர்களை விசாரித்தும் உண்மை புலனாகாமையால் கொத்த வாலிடம் பிராது தாக்கல் செய்கின்றார்.

பண்டரியில் நாயக்கர் வீடு: லக்ஷ்மிபாயிடம் மாயப்பிராமணர் தோன்றித் தமது வறுமையை வெளியிடுகின்றார் பகவத்பக்தியும் தரும குணமும் படைத்த லக்ஷ்மிபாய் தனது மூக்குத்தியைத் தருகின்றாள். அதைப் பெற்றுக்கொண்ட மாயப்பிராம்மணர் நாயக்கர் கடையிலேயே விற்பனை செய்கின்றார். மூக்குத்தியைக் கண்ட நாயக்கர் சந்தேகமுற்று வீட்டுக்குப்போய்ப் பணமெடுத்து வருவதாகப் பிராம்மணரைக் கடையிலேயே யிருக்கவிட்டு, அந்த மூக்குத்தியைப் பத்திரமாய் முடிந்து கொண்டு விரைந்து லக்ஷ்மி பாயிடம் வந்து "எங்கே உன் மூக்குத்தி" என்று கேட்க, லக்ஷ்மி பாய் திகைப்படைந்து "இதோ கொண்டுவருகிறேன்" என்று உள்ளே போய் என்ன செய்வதென்று தெரியாமல் பண்டரிநாதன் மேல் பழி போட்டு தன் உயிரை விட்டு விட த்துணிந்து தன் வைரமோதிரத்தை உடைத்து ஜலத்துடன் கலந்து உட்கொண்டதும், ஜலபாத்திரத்தைப் பார்க்கின்றாள். அந்த பாண்டுரங்கனின் திருவிளையாடல் தான் என்னே!

கிண்ணத்தில் மூக்குத்தி ஜ்வலித்துக்கொண்டிருக்கிறது இதை கண்டு பேரானந்த மடைகிறாள். மூக்குத்தியைக் கொண்டுவந்து நாயக் கரிடம் தருகிறாள். நாயக்கர் தன்னிடமுள்ள மூக்குத்தியை எடுக் கிறார். காணவில்லை. இதென்ன மாயமென்று திடுக்கிட்டு லக்ஷ்மி பாயிடம் உண்மையைக் கேட்கிறார். அதற்கு லக்ஷ்மிபாய் தான் ஒரு பிராம்மணருக்குத் தருமார்த்தமாக ஒரு நாளைக்கு இரவல் கொடுத்திருந்ததையும் தருமசங்கடத்திற் காளான தான் விஷ பானம் சாப்பிட்டதையும், பகவான் தன்னை பரிபாலித்ததையும் சொல்லி இதையே சந்தர்பமாய் கொண்டு தருமத்தின் மகி மையையும் எடுத்துச் சொல்லவே நாயக்கருக்கு ஞானோதயம் உண்டாகிறது. கேவலம் ஒரு மூக்குத்தி! முக்திக்கு வழிகாட்டுவ தென்றால் அளவற்ற தமது ஆஸ்தியை யெல்லாம் ஏழைகளுக்குத் தானம் செய்து பேரானந்தப் பெரும் பேறடையலாமே யெனத் துணிவுகொண்டு தமது ஸ்தாபர, ஜங்கம சொத்துக்கள் யாவையும் "கிருஷ்ணார்ப்பண" மென்று தானம் செய்துவிட்டு, கட்டிய துணி யுடன் கையில் தம்பூரையும் சிப்ளாவையும் கொண்டு பகவத் நாம ஸங்கீர்த்தனைகளைப் பஜனை செய்துகொண்டு புறப்படுகிறார், பத்தினி யும் புத்திரனும் அவரைப் பின்பற்றித் தொடர்கின்றனர்.

நாயக்கர் வியாஸராய மட ஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்று அகிம்ஸா தரும உணர்ச்சி மேலிட்டு தெய்வத்தின்பேரால் ஜீவபலி யிடுவதையும் பெண்கள் நிர்வாணமாய் வேப்பிலையைக் கட்டிக்கொண்டு ஆடுவதையும், அகாலத்தில் அரசு சுற்றும் அவிவேகத்தையும், பஞ் சாக்கினி மத்தியிலிருந்து உலகத்தை மயக்கும் லாடசன்யாசிகளின் வஞ்சகத்தையும் கண்டித்து நீதி மார்க்கங்களை இனிய கீர்த்தனங்க ளால் போதித்து வருகிறார்.

ஜாதி வித்யாஸம் பாராட்டிய வைதீகப் பிராம்மணர்களின் இரக்கமற்ற செய்கையால் உயிரிழந்த ஹரிஜனச் சிறுவனைப் பிழைக்க வைக்கின்றார். இவ்வித மஹத்வங்களால் கிருஷ்ணப்ப நாயக்கர் என்ற பெயர் மறைந்து "புரந்தரதாஸ்" எனக் கொண்டாடப் படுகின்றார்.

கிஷ்கிந்தா—தந்தையால் விரட்டபட்ட ருக்மணி தனது புக்ககத்தில் பாத்திரந்தேய்த்தல், மாவரைத்தல், துணி துவைத்தல், ஆகிய கடின வேலைகளைச் செய்தும் திருப்தி யடையாத மாமி சுப்பம்மாள், வரதக்ஷிணையும் தீபாவளிச்சீரும் சாந்தி முகூர்த்த சம்பாவனையும் தரவில்லையே யென்ற ஆத்திரத்தால் ருக்மணியைப் பேசாததெல்லாம் பேசி அவள் மூர்ச்சையாகும் வரை நையப்புடைத்துத் தள்ளிவிட்டுப் போகின்றாள். ருக்மணியின் துயரம் அதிகரித்து கல்லும் கரையும் வண்ணம் கடவுளிடம் முறையிட்டு மூர்ச்சை யடைகின்றாள்.

கருணாநிதியான பகவான் தன் பக்தனின் மகள்படும் துயரத்திற்கு கனிந்து, ருக்மணியின் தந்தையாகவும் ஸ்ரீமஹாலக்ஷ்மியே தாயாகவும் ருக்மணி வீட்டை நாடிவந்து மதிப்படங்கா மாணிக்க ரத்னாபரணங்களையும் உயர்ந்த பட்டு பீதாம்பரங்களையும் பொன் வெள்ளிப் பாத்திரங்களையும் சுவைமிகுந்த பண்டு பலாதிகளையும் சுகந்த பரிமளங்களையும் சுப்பியின் மனம் பூரிக்கும்படி சீர்களாகக் கொடுத்து ருக்மணி தம்பதிகளை ஆசீர்வதித்து விட்டு மறைந்து விடுகின்றனர்.

வனப்பிரதேசம்—லக்ஷ்மிபாயும் வரதவிடலும் சமையலுக்காக விறகு பொருக்குகின்றனர். இச்சமயம் உஞ்சை விருத்திக்குப் போய் வந்த புரந்தரர் வரதவிட்டல் வீட்டுக்குள்ளிருப்பதாக மதித்து, காலலம்ப ஜலங்கொண்டு வரும்படி இரண்டு மூன்றுமுறை அழைக்கிறார். சரேலெனப் பண்டரிநாதனே வரதவிடலுவாக உருமாறி வந்து கொதிக்கும் வெந்நீரைக் கொடுத்து சொம்படி படுகின்றார்.

பக்குவகாலம் வந்து விட்டது புரந்தரரின் மகிமை உலகமறிந்து உஜ்ஜீவிக்கக் கருதி பண்டரி நாதனே புரந்தரர் வடிவுகொண்டு தாசி வீட்டை யடுத்து தாசியின் ஆடல் பாடல்களில் மகிழ்ந்து ஒரு ரத்ன கடகத்தைப் பரிசளித்து விட்டுப் போய் விடுகின்றார்.

மறுநாள் விடியற்காலை பண்டரிநாதன் கைவளை திருட்டுப்போய் விட்டதாக ஊரெங்கும் முழங்குகின்றனர்.

நீதி ஸ்தலம்: கோவில் பண்டாக்களும், பொறாமைகொண்ட வைதீகரும், தாசியும், தாய்க்கிழவியும் கொடுக்கும் சமயோசித சந்தர்ப்ப சாக்ஷிகள் புரந்தரதாஸைக்குற்றவாளியாக்குகின்றன.

கொத்தவாலின் ஆக்ஞாசக்கரம் கொடிய நெருப்பைக் கக்கு கின்றது. புரந்தரர் தூணில்கட்டப்பட்டு சவுக்கடி படுகின்றார். பத்தினி யும் புத்திரனும் கதறுகின்றனர். பார்க்க வந்த ஊர் ஜனங்களெல்லாம் பரிதபிக்கின்றனர்.

பயங்கரமான பேரிடி: கோவில் கெர்ப்பக் கிருஹத்திலிருந்து ஸ்ரீ விடோபா அசரீரியாய்த் தோன்றி இத்திருட்டுக்குக் காரணம் தானே யென்றும் புரந்தரரைப் புனிதப்படுத்தவும், அவரால் உலகம் நித்ய விபூதியை யடையவும் செய்த பிரயத்தனங்களென்றும், நிரூபிக் கின்றார். எல்லோரும் ஆனந்த பரவசமடைந்து பண்டரிநாதனை வாழ்த்திப்பாடுகின்றனர்.

——: o :——

[நமது பாரதவருஷத்தின் மகிமையை வெளிப்படுத்திய மஹான் களில், புரந்தரரே மிகச் சிறந்தவர். இவரையே 'புரந்தரவிடலர்' என் பர். சங்கீத கலாநிதியாகிய ஸ்ரீமத் தியாகராஜஸ்வாமிக்கும் மிக முற் பட்ட பெரியார். (மகதி) முனிவராகிய நாரதப் பிரம்மமேபுரந்தரராகக் கர்னாடக தேசத்தில் திருவவதாரம் செய்து அதி யற்புதமான ஸங்கீத ஸ்வர ஸாஹித்யங்களால் பகவத் குணானுபவங்களை வெளிப்படுத்தின ரென்பது சித்தாந்தம்.

இப்பெரியாரின் கதையை ஒரு 'சீர்திருத்தக் கதை' என்றே சொல்லலாம். தற்கால உணர்ச்சிக் கேற்ப ஜீவபலி கூடாதென்பது தும் ஜாதிவித்யாஸ மில்லையென்பதும் அகாலத்தில் பெண்கள் அரசு சுற்றுவதால் நேரும் தீமையை விளக்குவதும், நிர்வாணமாய் வேப் பிலையைக் கட்டிக்கொண்டு களியாட்டம் போடுவதையும் மனசுத்த மில்லாமல் வெளிவேஷக்காரர்களை கண்டித்து அனேக நீதிமார்க்கங் களை புகட்டியதாகும்.

[மற்றும் இடைச்செருகலாக இக்கதைக்குப் பொருத்தமாய் அமைக்கப்பட்டிருக்கும் நகைச் சுவைதரும் காக்ஷிகளை வெள்ளித் திரையில் காணலாம்.]

பு ர ந் த ர தா ஸ்

---

1 லக்ஷ்மிபாய் (ராகமாலிகை)

விருத்தம்

பூமாதிருக்கும் திருமார்பும் புனல்மாதிருக்கும் இருபதமும்
மாமாண்புடனே யான்கண்டு வாழ்த்தி வணங்கவருள்வாயோ
தேமா மதுரத்தமிழ்மாலை சேர்த்தும் சூடிக் கொடுத்தவளை
நாமாதரிப்போமென மணந்த நந்தா ப்ருந்தாவனமாலே

ருக்மணி, வரதவிடல், விளையாட்டுப் பாட்டு

2 நோட் மெட்

புதுமாதிரி ஆஹா மஹா நேர்த்தியே
அதிமோகன முடைய வளையல்
அளவிது சரியே (புது மாதிரி)

காத்துக்கிசைந்த ஜோடியே என்
காத்துக்கிசைந்த ஜோடியே
கைவீசி வீசி ஆடவேணும்
பாடல் பாடியே
பட்டாசு பாரிதோ சுட்டால் சுடாததோ
நான்—சுட்டால் சுடாததோ
நான்—சுட்டால் சுடாததோ
படபடவென சடசடவெனப் பலித்திடாததோ
பட பட சட சடசடவெனப் பலித்திடாததோ

3 லக்ஷ்மிபாய் பல்லவி

பாவியென் வயிற்றினில் ஏன்பிறந்தாயோ
பனிநேர் மொழிமகளே (பாவி)

அனுபல்லவி

மேவியதுயரால் வெதும்புகின்றாயோ
விருப்புள்ள என்னையும் வெறுத்து நின்றாயோ
விநயசம்பனியே மானே (பாவி)

பெற்ற பெண்ணெனவே சற்றுமெண்ணுமல்
பிடித்துன்னைத் தள்ளவும் பெயர்ந்து சென்றுயே
பெருந்துயர் அடைந்தாயே (பாவி)

4 மாயப்ராமணர் தன்யாசி

பல்லவி

தருமம் புரிவாய் கருமம் விலகும்
சகலநன்மையும் கிடைக்கும் (தருமம்)

அனுபல்லவி

விருப்பமாய்ப் பண்டரி விடலனைப்பாடி
வெம்பிடும் ஏழைகள் தம்பசிநாடி (தருமம்)

சரணம்

ஆடருமேடையும் கூடமும் மனையும் ஆபத்திற் குதவாது
அணிபணி மணிமுதல் ஆர்ஜித்த பொருள்கள்
அந்தத்திற் கிடைக்காது
நீடியபுண்யம் ஒன்றே தொடரும்
நித்யம் நித்யம் சத்யம் சத்யம் (தருமம்)

5 ருக்மணிபாய்

மாமி சொன்ன வேலைசெய்ய
வருத்தமிக வுண்டாகுதே
பூமியில் நான் ஏன் பிறந்தேன்
போதுமிந்த துன்பமே
ஸ்ரீமுருந்தா ஜெயவைகுந்தா
திருவனந்தா கிருபைதா (திருவனந்தா)

6 ராஜாராமும், ருக்மணிபாய்

நேசமாகப் பேசும் யோகம்
நேர்ந்ததினுல் நம்மை நிகரெவர் பூமியில்
நிஜமா மாரா புஜசிங்காரா
கெஜ கெம்பீரா
ஆசைமனோஹரி பூஜிதமாமணி
மாசில் குணகரி யோசனை யேனடி
அதிக சிரமமேன்
எனது கடமையே

உதவி புரிவதுதானே
போகானுகூலமே வாகான காலமே
பூர்ண சல்லாபமாய் நாம் விளையாட
நீடுதுநேரமே நாடிவாராய்
வாடுது பூம்பொழில் நீரில்லாமல்
நீரிதோவார்க்கின்றேன் வாடிடாமல்
மாமனோஹரா
காமரூபிணி. (நேசமாக)

7 ருக்மணிபாய்

இதுவு முன் திருவருளா
இனகுல கனதிலகா
சதா விரோதம் மாமி—மாமி (சதாவி)
புரிவதைநான் இனிசகியேன்
தயவுடனே அருள் கனிந்திடாய்

8 லக்ஷ்மியும், வரதவீடலும்

கரிவாதா திருமகள் கருத்துக்கிசைந்த மோகனனே
கருதிடும் அடியர்கவலை, களையுங் கருட வாகனனே
முரஹரி நரஹரியே முதுமறை புகழ் சரிதா
முனிவர்கள் பரவுமஹா பலவிரதா
அருள்வாரிதியே அழகிய மதியே
அணியார் நிதியே அழியா விதியே
நீலமேக நிறமான நூபனே நிமலகுண கண்ணே ப்ரதாபனே
நிலையாத ஜெனனமிது வேண்டிலேன்
நினதான பதமீயும் ஆண்டவா
நிலமகள் பெருமானே (கரிவாதா)

9 லக்ஷ்மிபாய்

அபராதி யாகினேனே
அருள்கூர்ந்திடாய் வல்லோனே
தபயோகர் பேசுவோனே
தரியேன் என்னுவிதானே
தோரா (அபராதி)
பூரண லோகபரிபாலன அவதார
காரணகஜேந்த்ர வரதா
வீரமிகுபாஞ்சாலி மானஸம்ரக்ஷண
வேண்டினேன் ஆண்டருள்கவே
உனைநம்பினேன் முகுந்தா உயர்

உம்பர்வாழ் வைகுந்தா
வினைவென்ற நந்தனந்தா
விலகாமலுன் பதந்தா (அபராதி)

10 புரந்தரதாஸ் ராகம் மோகனம்

பல்லவி

பரமானந்தம் கொண்டேன்—இருள் போய்
பகலானதைக் கண்டேன் (பரமானந்தம்)

அநுபல்லவி

புரைதீர்தருமமே புரிந்து மென்மேலே
புரந்தர விடலனைப் புகழ்வதினாலே (பரமானந்தம்)

சரணம்

பணத்தாசையினால் பறவையாய்ப் பறந்தேன்
பார்ப்பவர் லோபியென்றே பகரவும் பிறந்தேன்
மணத்தார்த்துளவனை ஸ்மரிக்கவும் மறந்தேன்
மனைவியால் இவையெல்லாம் மாயமென் றுணர்ந்தேன் (பர)

11 புரந்தரதாஸ்

ஸ்ரீமுகுந்தா க்ஷேமகரந்தா
ஜேஜே வைகுந்தா சதானந்தா (ஜேஜேவை)
காமஜெனகா ஸோமசுமுகா
ராமராம நாமனே
தேவதேவா ஸ்ரீதரனேவா
தீனர்க்காதாரா பராபரா (தீனர்க்காதர்ர)
நாவலோனே ஞானவானே
நாகராஜ தியாகனே
சேஷசயன தோஷரஹிதா
தாஸஜெனோர்த்தாரா சராசரா (தாஸ)

12 வரதவிடலு

வருவாய் நீநாடி யோடியே
வரமருள் பண்டரி நாதா (வருவாய்)
வாரிஜநாபா வனகோபாலா
மதுசூதன மணியொளி சரண
வானோர் அனுதினம் துதிபுரிபவனே (வருவாய்)

மோகனரூபா ஹரிநாராயணா
முரளீதர ஜெயஜெய விடலா
மூவா முதலுனை விடகதியில்லையே (வருவாய்)

13 புரந்தரதாஸ் ராகம்—இ—பியாகு

மோக்ஷ நலந்தருமோ—இச்செய்கை (மோ)
மோக்ஷ நலந்தரும் முறையிது வல்லவே
காக்ஷிக்கரும் ஸர்வ ஸாக்ஷி தான் உமக்கே (மோ)
கண்ணென்று காணவும் காதொன்று கேட்கவும்
எண்ணதிலொன்று மாய் இருந்திடும் உமக்கே (மோ)

14 ருக்மணி

எனதெதிர் வாவா துயரினி சகியேன்
இனகுல தீபா முனி சல்லாபா
தனிநாயகனே சமயோசிதனே
தயை நீ புரிகுவாய்
சர்வலோக ஸ்வாமியுனையே
சரணடைந்தேன்
சாமளாகா கோமளாங்கா
சதமென வருவோர்க் கருள் சௌபாங்கா

15 டான்ஸ்

தலைமேலேயிருக்கும் குடத்தை யிறக்குங்கோ
மேலான சீலகுமாரரோ—பாரும்
வேகமாய்ப் பாயுதென் நெஞ்சில் கட்டாரிபோல்
பார்க்குங்கண்ணு லடிக்காதிங்கோ (தலைமேலே)

16 புரந்தரதாஸ் ராகம் மாண்டு

வினோதகலிகாலமே மாமாலமே
ஆ மாமாலமே
கால மாமாலமே
அந்தோ மாமாலமே
ஈதோர் வீண்ஜாலமே (வி)

விரோதமாகவே வெகுஜனர் கூடி விளையாடுதல் சரியா
மாயமாதர் பலர் வேஷதாரிகளாய்
வீதி யிலேதிரிதல் விரசு மதல்லவோ
வெகு கோர மதாய் உயிர் வதை புரிவது நலமோ
வினை தீர் பெரியோர் விரும்பாரிதை—சற்றும் விரும்பார் (வி)

17 புரந்தரதாஸ்

இதமான சுத்தம் இல்லாத மாந்தர்கள்
நதி மூழ்கில் என்ன பலன்—ஏ மனமே
எட்டாத கனி யொன்றை ஏறிப் பறிப்பதற்குக்
கொட்டாவி கொள்ளுகின்றாய்—ஏ மனமே
எரியாத நெருப்புக்கு இடையிலமர்ந்திருந்தால்
பெரியார்கள் என்பார்களோ—ஏ மனமே

18 புரந்தரதாஸ் அகவற்பா

புலையன் புலையன் புலையனென்றுரைக்கும்
கலைவல்லீரே கழறக்கேண்மோ
அவரவர் செய்யு அனுஷ்டானத்தால்
கௌரவமல்லாமல் கருதவேறில்லை
ஜீவகாருண்யம் சிறிது மில்லாமல்
பாவகாரியத்திற் படர் மனமுடையோன்
மாசிலா வேத மார்க்கங்கற்ற
பூசுரனாயினும் புலையனே யன்றோ
ஆசறுமனைவியை யகல விடுத்து
வேசையைப் புணர்வோன் வெறுக்கும் புலையன்
குருவை நிந்தனை கூறுவோன் புலையன்
பெரியரை இகழ்ந்து பேசுவோன் புலையன்
ஈசனடியார் இதயம் புண்பட
ஏசிப்பேசும் இவனோர் புலையன்
தரப்படவேண்டிய தனம் படைத்திருந்தும்
இரப்பவர்க்கீயான் எவனும் புலையனே

19 புரந்தரதாஸ் கட்டளைக் கலித்துறை

அடியார் மனதிற் குடிகொண்டு காவல் செய் ஆரமுதே
நெடியாய் வருக நிமலாவருக நெடுந்துயிலில்
கிடையாய்க்கிடக்கும் ஒரு சிறு பாலன் கிளர்ந்தெழுந்து
படிமேல் நடக்கத் திருவருள் செய்தென்னைப் பாலிக்கவே

20 லக்ஷ்மிபாய்

ஹரிமாதவனே அனகா கனகாம்பரனே
சீர்தரும் (ஹரி)
ஹரனே அயனே அமராதிபனே
அழகாபூமகள் பிரானே
குருவேமேலோர் குணமேவானோர்
குழுவேபார்புகழ் கருமணிமலையே (ஹரி)

கரிகூவிய பூரணனே எனதோர்
கதிநீயே எனை விடாதே
வரியோர் போலே மிடியால் நோகா
வரம்நீயேதர மனதருள் புரிவாய் (ஹரி)

21 புரந்தரதாஸ்

ராகம் இந்துஸ்தான் காபி—ரூபகம்

பல்லவி

சிந்தெ ஏதகோ மனுஜ
ப்ராந்தி ஏதகோ (சிந்தெ)

கந்து பிதன திவ்ய நாம
மந்த்ரவன்னு ஜபிஸுவவகே (சிந்தெ)

பரதல்லி பதவி யுண்ட்டு இகதல்லி சௌக்ய உண்ட்டு
குருபுரந்தரவிடலன ஸ்மரணெயத மரெயவகெ (சிந்தெ)

22 ராதா காபி ஆதி

ஜாகேலாா கிருஷ்ணா
வேகரார வேணு லோல (ஜாகேலாா)
சாஸமாட கோரி மீரி
தாபமொரந்தி தள்ளடிந்து
வுருளதண்ட வேசி நீக்கு
பரம ப்ரீதி கூடி நின்னு பட்டிகௌங்கலிந்து ரா
கமலா ரமண சரண (ஜாகேலாார)

23 புரந்தரதாஸ்

மூய்யிகெ மூய்யி தீரிதய்ய ஜகதய்யா
ஸுஜன ஸுகங்கா புரந்தா விடலா
விஜய ஸ்ரீ கரபுரந்தா விடலா (பாண்டு ரங்க ஜயபுரந்தா விடலா)
மனு முனி நுத சரிதா ஸ்ரீ மஹிதா மங்களாங்க ஸ்ரீ
மங்களாங்க மஹிமா கா ஸுபஹா
ஜய கருணகா புரந்தா விடல
ஜய கமலாவா புரந்தா விடல

பொது நாமாவளி

24 ஹரி ஹரி மாதவ பரிபுர சரண
அகணித சாதக குணகரண
புரந்தா விடலர் ஜிதகிரண (ஹரி ஹரி)

லக்ஷ்மியாய்:—

ராகம் - காபி — தாளம் திசிரம்

தேவகி சுகுமாரா சிங்காரா சரீரா
தீன ஜனோத்தாரா தேவா அலங்காரா (தேவகி
மூவா முதலோனே மோகன கெம்பீரா
முழுதும் உனது தாமரைப்பதம்
தொழுதேன் அருள்தாராய்

சாது:—

ராகம் ஜோகியா—அடதாளம்

தேகம் மாய மதாம்
உலகாசை இதேன்
ஸ்திர மானது ஈசன்
பொன்னடியே (தேகம்)
மனையும் பொருளும்
ஓர் பெரும் சுமையாமே
மேலதில் ஏனோ நசையே
பண்டரி பாண்டுரங்க உதாரனை
பஜிப் போருக்கு என்றும் சுகமே மனமே (ஸ்திர)

லக்ஷ்மிபாய்:—

இந்துஸ்தான் மெட்டு

ருக்மணி மானே பக்குவ தேனே
உன்னைப் பிரிந்தேனே—நானே
திக்கில்லை எனவே அக்ரமமாக
தீங்கு செய்வாளோ—உன் மாமி
பாங்கு செய்வாளோ (ருக்மணி மானே)
என்னமோ அறிய வசதி இல்லேனே
யார் இதை நேர் சொல்லுவார்
பாக்ய குணவதி பால்ய யுவதி
பாவி என் ஆரமுதே—
துக்கமிகும் காலமோ

புரந்தரதாஸ்:—

ராகம் மிஸ்ரமாண்டு — தாளம் ஆதி

அன்பே உலக மாகும் ஜீவர்கள்
அன்பே உலகமாம் (அன்பே)
ஆரண மறியா பூரணப்பொருளாம்
யாதவ மாதவன் அமரர்கள் பெருமான்
அடிமா மலர்க்கே சேவை செய்யும் (அன்பே)
தான் செய்யும் தருமம் தலை தனைக்காக்கும்
தாமவைகுந்தந் தனிலே சேர்க்கும்
தாழ்ந்தவர் முகம் பார்க்கும் நல் (அன்பே)
ஆண்டவன்முன் யாவரும் ஒன்றே
அகிலமெல்லாம் அவன் ஆருயிர் என்றே
அறிவாலே நினைப்போர்கள் தாம் செய்யும் (அன்பே)

புரந்தரதாஸ், லக்ஷ்மிபாய்:—

ராகம் மிஸ்ரகாபி — தாளம் ஆதி

மாதவ கேசவ மாயா மதுசூதன
மாதுர்ய சாதுர்ய னேவா
மங்களதுங்கமு குந்தனே கோசல
மாமக ராஜ குமாரா (மாதவ)
வாசவனுதியர் பூஜனேயேபுரி
மரகதநிற அலங்காரா
வருக வருக பண்டரிபுர வேங்கட
வாத விடலனே வா (வருக வருக)
சாரசநேத்ரா தபஜென ஸ்தோத்ரா
சரசருக்மணிதன்ப்ரிய மிகு பாத்ரா
நார சிங்கவா மனஜெக மோகன
கடமிடு யத புஜ காத்ரா (மாதவ கேசவ)

புரந்தரதாஸ், லக்ஷ்மிபாய்:—

மாரஜனகா வாத விடலா ஆ தீனாக்ஷகா
தீனாக்ஷகா மாது ருக்மாயி மனோஹரா (மாரஜனகா)

புரந்தரதாஸ்:—

ராகம் — சிவரஞ்சனி — தாளம் ஆதி

கெஜவரதா ஓடிவா முன்னாலே ஏ (கெஜ) இது
தருமோ நானுன்னைத் தேடுகின்றேனே (கெஜவரதா)
பூஜித மிகும் உன் பாத சேவை
புரிபவனென உணராயோ
பூந்தாமரை சரணா விதாணா
பூமகள் ஆசை மணாளா (கெஜவரதா)
பூரணனே புவிக்கோர் காரணனே
புங்கவர் சேவை கொள் வோனே
கோமள ஸ்ரீதரா குதூகுல
கோபிய சோதை குமாரா
தாமதமேனோ நீ வராவிடி லுன்
தரிசனம் பெற வருவேனே (கெஜவரதா)

சுந்தரி:—

ராகம் பகடி—தாளம் ஆதி

வாவா கிருஷ்ணா விளையாடுவோம் எதிர்வா கிருஷ்ணா
தேவா தேவசிகாமணியே வா
சீல சிங்கார தீரா கிருஷ்ணா—விளை
யாடுவோம் எதிர்வா கிருஷ்ணா
ராதா ரமண நந்தா—மிகு
நவ நவ நீத சுகந்தா—
கீதானந்த முகுந்தா
கிருபாகர வைகுந்த கிருஷ்ணா (வாவா கிருஷ்ணா)
ஆலிலைமேலோர் பாலனும் நீயே
ஆதியு நாதியு மாய்நின்றாய் (கிருஷ்ணா விளை)
ஆஹா மோகம் ஆகினேன்—உன்
ஆதாரம் நான் ஆகினேன் (கிருஷ்ணா)

புரந்தரதாஸ்:—

ராகம் யமன் — தாளம் ஆதி

ஜே ஜே விடலா ஸ்ரீ பாண்டுரங்கா
ஜெகன் மோகன ஸ்வரூபா வரதுங்கா
தீன ஜனார்தன கமலாகர சரணு
ஸ்ரீ தரா மாதவா கௌஸ்துவா பரணு
ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார காரணு
சிகா மதாசல கஷ்ட நிவாரணு
பரமா புருஷோத்தம சக்ர தாரா
பலராம கிருஷ்ண வதாரா

புரந்தரதாஸ்:—

ராகம் கமாஸ் — தாளம் திசிரம்

ஹரி விடல விடல விடல னெனவெ
விருப்புடன் துதிப்போமே (ஹரி விடல)
வேத புருஷன் அவனை மனதில்
விளங்கவும் பஜிப்போமே (ஹரி விடல)
ஜெக வாழ்வினை நம்பி நின்றோரே—சன்
மார்க்க முள்ள நல்லோரே
அந்த வாஸவன் ஏவிய மாரியை
அன்றொரு மாமலையால் தடுத்தோனை
இந்த-மண்டல முண்ட பெம்மானை
முக்தி முகுந்தனையே—நித்ய சத்வ
முக்தி முகுந்தனையே
ஸ்ரீதர மாதவ கேசவ யாதவ
சேகரனை முக்தி கோரி (ஹரி விடல)

குழந்தைகளின் ஈரல் வியாதிகளைப்பற்றி

கவலை வேண்டாம்

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

லிவர் க்யூர்

(ரிஜிஸ்டர்ட்.)

கண்டிப்பான குணம் அளிக்கிறதென்று
எல்லோராலும் புகழப்படுகிறது

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

அல்லது

நெ. 8, சாலைத் தெருவு, மைலாப்பூர்,

மதராஸ்.

Jammi Venkataramanayya's

LIVER CURE

(Registered.)

The Ideal Specific for Infantile Liver & Spleen Complaints

AT ALL CHEMISTS

OR AT

8, SALAI STREET, MYLAPORE,

MADRAS

The Modern Printers, Madras.

தேவி பிலிம்ஸாரின் கீர்த்திபெற்ற முதல் சமூக

கன்னட பேசும் படம்

சம்சார நௌகா

எல்லோராலும் உன்னதமானது

என்று புகழப்பெற்றது

DEVI FILMS LTD.,
MADRAS

பக்த புரந்தரதாஸின்

தமிழ் & கன்னட பாடல்களை

ஹிஸ்-மாஸ்டர்ஸ் வாய்ஸ் ரிகார்டுகளில்

"HIS MASTER'S VOICE"

கேட்டு ஆனந்திக்கவும்

The Modern Printers, Madras.